வாரம் - 16　　ஊக்கப் பாடல் எண் - 16

# திருக்குறள்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொலினதே அறம்.

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

பணிவுஉடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

- திருவள்ளுவர்

திருக்குறள் பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

எப்படிப் படிப்பாய் ? எப்படி இருக்கிறது ? நடிப்பு எப்படி ?

வாரம் - 16 பேசிப் பழகுவோம் எண் - 14அ

## வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

### நீ எப்படிப் படிக்கிறாய் ?

**நான் நன்றாகப் படிக்கிறேன் .**

**நான் தமிழ் நன்றாகப் படிக்கிறேன் .**

**நான் விடுதியில் தங்கிப் படிக்கிறேன்.**

### இது எப்படி இருக்கிறது ?

**இது அழகாக இருக்கிறது .**

### என் நடிப்பு எப்படி இருக்கிறது ?

**உன் நடிப்பு சிறப்பாக இருக்கிறது .**

### ஊருக்கு எப்படிச் செல்வது ?

**ஊருக்கு மகிழுந்தில் செல்லலாம் .**

வேறு வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.

**எப்படி** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்

## வாரம் - 16 பாட அறிமுகம்







அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

# வாரம் - 16

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட ழ் ழ எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ழ் | ழ | ழ் | ழ | ழ் | ழ |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 16

மாணவர் செயற்பாடு எண் - 2

மாணவர் பெயர் ........................................ நிலை............ நாள்................

( கற்றுக்கொண்ட ங் ங எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ங் | ங | ங் | ங | ங் | ங |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 16

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... **நிலை........... நாள்...............**

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

### நினைவூட்டல் -

ழ்ழ ழழ் பழ மழ கழ தழ

வழ வழ மழ மழ

ங்ங ஙங் டங் பங் மங்

மங்க சங்க கங்க மங்க

வங்க ரங்க நங்க

சங்கடம் பங்கம் தங்கம்

வங்கம் ரங்கன் மயங்க

சங்கம் சதங் பதங்

நடங்க வணங்க

வழங்க கலங்கல்

பணங்கள் மணங்கள்

நகங்கள்

மடங்கள் மடங்கல்

தங்கல் தங்கள்